# 21 மிரியம்

இறைபற்றுடையவராக தீமையை மேற்கொண்ட தாவீதின் துணிச்சலான செயற்பாட்டின் மூலம் அவர் எமக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளதை நாம் கடந்த பாடத்தில் அறிந்து கொண்டோம். இஸ்ரயேல் குடும்பமொன்று எகிப்தில் துன்பத்தை எதிர்நோக்கிய போது அக்குடும்பத்தின் பெண்பிள்ளை துணிச்சலுடன் செயற்பட்டு அந்நிலைக்கு முகம்கொடுத்ததை இப்பாடத்தில் நாம் அறிந்துகொள்வோம். அதன் மூலம் எமது குடும்பங்களில் ஆற்றப்படக்கூடிய நமது வகிபங்கை அறிந்து கொள்வோம்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் யாக்கோபின் குடும்பத்தினர் பலஸ்தீனாவில் பெரும் பஞ்சமொன்றை எதிர்நோக்கியபோது அவர்கள் எகிப்துக்கு சென்று அங்குகுடியேறினார்கள். அங்கு வாழ்ந்தகாலத்தில் இக்குடும்பம் எண்ணிக்கையில் வளர்ச்சியுற்றது. எகிப்தின் பார்வோன் பெருகிவரும் இஸ்ரயேலரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த பல உபாயங்களை மேற்கொண்டான். ஆனாலும் அவை பயனளிக்கவில்லை. இறுதியாக, இஸ்ரயேலருக்குப் பிறக்கும் ஆண்குழந்தைகள் அனைவரும் நைல் நதியில் வீசப்பட வேண்டும் என்ற கட்டளை பிறப்பித்தான். இஸ்ரயேலர்கள் எகிப்தில் எபிரேயர் என்றே அழைக்கப்பட்டனர்.

எகிப்தில் வசித்த லேவி கோத்திரத்தைச் சேர்ந்த அம்ரம் மற்றும் யாக்கோபெத் ஆகியோருக்கு ஆரம்பத்தில் இரு பிள்ளைகள் இருந்தனர். மூத்தசகோதரன் ஆரோன், இளைய சகோதரி மிரியம். பார்வோனின் இக்கட்டளை நடைமுறையில் இருக்கும் காலத்தில் இக்குடும்பத்திற்கு இன்னுமொரு ஆண்குழந்தை பிறந்தது. இதன்விளைவாக பார்வோனிடமிருந்து இச்சிறு குழந்தையைப் பாதுகாக்க வேண்டியபெரும் சவாலை இக்குடும்பம் சந்தித்தது. அவ்வேளை இக்குடும்ப அங்கத்தவர்கள் செயற்பட்ட விதத்தை நாம் பார்ப்போம்.



## வாசிப்போம்
## விடுதலைப்பயணம் 2:5-9

யாக்கோபெத் : மிரியம், இதோபார்! உனது தம்பி சற்று வளர்ந்து பெரியவனாகிறான். இப்போது அவன் அழும் சத்தம் வெளியிலும் கேட்கிறது. தொடர்ந்தும் இந்தக் குழந்தையை நாம் ஒளித்து வைத்திருப்பது மிகவும் சிரமமான காரியமாகும். போர்வீரர்கள் வந்துவிட்டால்.....

மிரியம் : அம்மா! எமது இந்த சிறுதம்பியை எப்படி காப்பாற்றுவோம்? அப்பா! நாம் பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது. தம்பி அழுகிறான். வெளியில் எவராவது கேட்டு விட்டால்....... வந்து தம்பியை எடுத்துச் சென்றுவிடுவார்களே.

யாக்கோபெத் : நாம் கோரைப் புல்லால் பேழை ஒன்றை செய்து தம்பியைஅதனுள் வைத்து நதியோரத்தில் பாதுகாப்பாக வைத்திடுவோம். அப்போது அவன் அழுதாலும் எவருக்கும் கேட்காது.

மிரியம் : ஆம், அம்மா சொல்வதன்படி செய்வோம். நான் சென்று கோரைப் புற்களை எடுத்துவருகிறேன்.

**தமது சகோதரன் மீது இருந்த பாசத்தின் விளைவாக அண்ணாவும் அக்காவும் செயல்படல்**



படம் 21.1 மிரியம் கோரைப்புற்களை கொண்டு செல்லல்

யாக்கோபெத் : (கோரைப்புற்களில் பேழையைசெய்ய ஆரம்பித்ததும் எல்லோரும் அவருக்கு உதவிசெய்தனர்)

**பெட்டியை கவனமாக செய்தல்.**

மிரியம் : நாம் தம்பிக்குபால் கொடுத்துவிட்டு பேழையில் வைப்போம்.

யாக்கோபெத் : இப்போது வைக்கமுடியாது. ஆற்றோரத்தில் வைத்தால் இந்த இடைவெளிகளுக்கூடாக தண்ணீர் உள்ளேவரும். அதைத் தடுக்க நிலக்கீல் பூசவேண்டும்.

(மிரியமும் ஆரோனும் நிலக்கீலை எடுத்துவந்து பேழையின் அடிப்பாகத்தில் பூசி இடைவெளிகளை அடைத்தனர்).

யாக்கோபெத் : மகள், தம்பியை இப்போது பெட்டியில் வை. நாம் கவனமாக சென்று வைத்து விட்டு வருவோம்.

**சகோதர பாசத்தினால் தம்பியைக் காப்பாற்ற மிரியம் முன்வரல்**

மிரியம் : அம்மா! நான் புற்புதர்களில் ஒளிந்து தம்பியைக் கவனித்துக் கொள்கிறேன்.



படம் 21.2 மிரியம் மறைத்து வைத்தல்

மிரியம் இவ்வாறாக தம்பியைப் பார்த்துக்கொண்டு இருக்கும் போது ஒரு புதுமையான சம்பவம் நடைப் பெற்றது. பார்வோனின் மகள் தனது தோழியரோடு நீராடுவதற்கு ஆற்றிற்கு வந்தார். அவர் நீராடிக்கொண்டு இருக்கும் போது தோழிகள் ஆற்றோரத்தில் மேலும் கீழும் உலாவிக்கொண்டிருந்தனர். அரச குமாரி பெட்டியைப் பார்த்து அதைஎடுத்து வரும்படி தனது தோழி ஒருவருக்கு கட்டளையிட்டார்.

அரசகுமாரியைப் பார்த்த மிரியம் தன்னை தைரியப் படுத்திக் கொண்டாள்.

அரசகுமாரி: எவ்வளவு அழகானகுழந்தை இது! பசியாய் இருக்கும் போல்..... அழுகின்றதே. இந்தக் குழந்தையை நான் பாதுகாக்க வேண்டும். யார் இந்த குழந்தைக்கு பாலூட்டுவார்?

ஒளிந்திருந்த மிரியம் துணிவோடு அரச குமாரியிடம் வந்தாள்

மிரியம் : அரசகுமாரி! உமக்குப் பதிலாக இந்த குழந்தையை வளர்க்க செவிலி ஒருத்தியை அழைத்து வரட்டுமா?

மிரியம் தனது தம்பியை வளர்க்க உதவி செய்வதற்கு முன்வந்தாள்

அரசகுமாரி : அது பெரிய உதவியாக இருக்கும்.

மிரியம் : நான் ஓடிப்போய் பாலூட்டும் தாய் ஒருவரை அழைத்துவருகின்றேன்.

அரசகுமாரி: குழந்தைக்கு பாலூட்டதாய் ஒருவரை அழைத்து வந்ததற்காக உனக்கு மிக்க நன்றி. இந்த குழந்தைக்கு பாலூட்டி வளர்த்து சிறிது பெரியவனானதும் எனது மாளிகைக்கு அழைத்து வாருங்கள்

மிரியமின் துணிவும் உண்மையான பாசமும் தம்பியின் கொடூர மரணத்தைத் தடுத்தது. இது எமக்கும் சிறந்த முன் உதாரணமாகும்.

யாக்கோபெத்: ஆம் குமாரியே! உங்களது விருப்பப்படியே செய்கின்றேன்.

அரசகுமாரி : நான் நீரிலிருந்து இவனை எடுத்தேன். எனவே இந்த குழந்தைக்கு மோசே என்று பெயரிடுகிறேன்.

இவ்வாறாக கடவுளின் பாதுகாப்பைப் பெற்றுவளர்ந்த மோசே, பிற்காலத்தில் எகிப்தில் அடிமைத்தனத்தில் வாழ்ந்த மக்களை விடுவிக்க தலைமைத்துவத்துடன் செயற்பட்டார். அப்பங்கை அவர் இறைவனின் அழைப்பினால் பெற்றக்கொண்டார்.

இந்தப் பாடத்தில் நாம் சந்தித்த சிறுமி, எல்லா கிறிஸ்தவ பெண்களுக்கும் முன்மாதிரியாக அமைகின்றார். எமது குடும்பங்களிலும் நாம் சகோதர அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். எமது நாட்டிலும் குடும்பங்களிடையே தடைகள் ஏற்படுத்துவோரைத் தடுத்து அன்பையும் ஐக்கியத்தையும் வளர்க்கவேண்டும்.

**மனனவசனம்:**

***விடுதலைப்பயணம் 2:10***

'நீரிலிருந்து நான் இவனை எடுத்தேன்' என்று கூறி அவள் அவனுக்கு மோசே என்று பெயரிட்டாள்.

செயற்பாடு

1. மிரியம் தன் சகோதரனைக் காப்பாற்றுவதற்கு எடுத்த நடவடிக்கைகளை எழுதுக.

2. உங்களுடைய வீட்டில் சகோதர சகோதரிகளின் நலனுக்காக எடுக்கக்கூடிய 5 நடவடிக்கைகளை எழுதுக